# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 244/3—1976 දෙසැම්බර් 20 වැනි සඳුද—1976.12.20

244/3 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

## துணைவிதிகள்

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

*(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ், கொழும்பு மாவட்டத்திலுள்ள பியகம கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவினால் தமக் குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.*

ஜ. ஈ. எச். அமரசேகர,  
செயலாளர்,  
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1976.12.18.

பொதுச் சந்தைகள் சம்பந்தமான துணைவிதி

கொழும்பு மாவட்டத்திலுள்ள பியகம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பொதுச் சந்தைகள் சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் XXVII ஆம் பாகத்தின் I ஆம் துணைவிதி யின் நோக்கத்திற்காக, பின்வரும் எல்லைகளுக்குட்பட்ட பிரதேசம், கடவத்தை பொதுச்சந்தைக்கான சந்தைப் பிரதேசமாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

வடக்கு: பியகம மகாறை கிராமச் சபைப் பிரதேசத்தின் வட எல்லையிலுள்ள ஓரிடத்தி லிருந்து கொழும்பு-கண்டி வீதியிலுள்ள 9½ ஆம் மைல்கள் வீதி வரை நீண்டு வட கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையோரமாக கொழும்பு-கண்டி வீதியிலுள்ள 11/1 ஆம் இலக்க மதகின் மத்திக்கு நேரேயுள்ள ஓரிடம் வரை வரையப்பட்ட ஒரு கோட்டி னால்;

கிழக்கு: கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி கொழும்பு-கண்டி வீதியி லுள்ள 11/1 ஆம் இலக்க மதகின் மத்தியிலுள்ள ஓரிடம்வரை; அங்கிருந்து சொல்லப் பட்ட கொழும்பு-கண்டி வீதியின் மத்திய கோட்டிற்குத் தெற்கே 300 அடி தூரத்தி லுள்ள ஒரு கற்பனை இடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

தெற்கு: கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கி கொழும்பு-கண்டி வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் சொல்லப்பட்ட வீதியிலுள்ள 9½ ஆம் மைல்கல்லுக்கு நேராகவுள்ள ஓரிடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு: கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி கொழும்பு-கண்டி வீதியி லுள்ள 9½ ஆம் மைல்கல்லைக் கடந்து சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோடுவரை; அங்கிருந்து வடக்கு நோக்கி பிரதேசத்தின் வட எல்லை ஆரம்பிக்கும் இடத்தைச் சந் திக்கும்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

12-584

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது